| வாக்குமூலம் | |
|---|---|
| நீதிமன்றம் : குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மணப்பாறை | |
| வழக்கு எண்: CC 20/2021 | |
| வழக்கு சாட்சி : PW4 | |
| பெயர் : திரு. ராஜகோபால் | ஜாதி : |
| த/பெ /க/பெ. : திரு. பழனியப்பன் | தொழில் : பைனான்ஸ் |
| கிராமம் : ராக்கம்பட்டி | சமயம் : இந்து |
| தாலுக்கா : மணப்பாறை | வயது : 28 |
| ( எதிரிகள் ஆஜர் இல்லை குவிமுச 317 ன் கீழ் மனுதாக்கல் ) | |

---

**எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 2, 3 ஆண்டுகள் இருக்கும். ராக்கம்பட்டியில் எங்கள் ஊரிலிருந்து கடைக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது பிரச்சனையாக இருந்தது. அந்த பிரச்சனையை பார்த்து கொண்டிருந்தபோது போலிசார் வந்திருந்தார்கள். ஸ்டேட்மண்ட் எழுதி பாத்தீங்களா என்று கேட்டு சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். **பார்வை மகசரில் கண்டுள்ள முதல் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**2.** நான் முதல் விசாரணையில் சொல்லிய விபரத்தைதான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். புகார் கொடுத்த பொன்னர் எனக்கு என்ன உறவு என்றால் நண்பர். ஆரம்பத்திலிருந்து ஒன்றாக படித்தோம். அவர்களுக்குள் நடந்த பிரச்சனை சம்மந்தமாக காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை. எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் ஸ்டேட்மண்டில் மட்டும் கையெழுத்து செய்தேன். நான் ஸ்டேட்மண்டில் காவல் நிலையத்தில் கையெழுத்து செய்தேன் என்றால் தவறு, சம்பவ இடத்தில் தான் கையெழுத்து செய்தேன்.